# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal Multidisciplinary)

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:7 Issue :28 October 2025*

கோட்டை:7 வாயில்:28 அக்டோபர் 2025

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism ,
University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University)
Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

# அரண் Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*International e Journal of Tamil Research*



## EDITORIAL BOARD

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet, Chennai - 600 021.

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

**+917299587879**

www.aranejournal.com

aranjournal@gmail.com


அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அகத்தினுள்

ஐங்குறுநூறு 'சிறுவெண் காக்கைப் பத்து' பாடல்களில் எடுத்துரைப்புச் சிறப்புகள் மற்றும் நுட்பங்கள்
முனைவர் நா.ஜானகிராமன்1, முனைவர் பெ.தனலட்சுமி2

குறுந்தொகையை தழுவிய இக்கால படைப்புகளில் இலக்கியநயம்
மெ.பேபி நிஷாந்தினி

பட்டினப்பாலையில் பழந்தமிழரின் கடற்பயணத்தில் மரக்கலங்கள்
ப.ராம்குமார்

புறநானூற்றில் உயிரியல் செய்திகள்
எம்ஜிராமச்சந்திரன். வெ

புறநானூற்றில் தமிழர் பண்பாடு
திருமதி கா.சுகன்யா,

செவ்வியல் இலக்கியங்களில் இல்லறத்தில் தாயின் பங்களிப்பு
இரா.சினேகலதா

திருக்குறளில் உழவும் உண்மைநிலையும்
முனைவர் இரா.ஜெய்சங்கர்

திருக்குறளில் மருத்துவச் செய்திகள்
முனைவர் சல்மா மஹஜபீன் த. மு

திருக்குற்றாலக் குறவஞ்சியில் குறத்தியின் குறிசொல்லும் பான்மை
க.நித்தியா

அபிராமி அந்தாதி - ஒரு பார்வை
சா.கஸ்தூரி

வேட்டுவர்களின் பண்பாட்டு சார்ந்த மரபுகள் — சிலப்பதிகாரம்
முனைவர் த. சுபஜா

வைணவ உரைச் சக்ரவர்த்தி பெரியவாச்சான் பிள்ளை
முனைவர்ப.தனஞ்செயன்

தெய்வங்களும் கோவில்களும்
அ.அறிவுக்கொடி

பெரும்பண்ணையூர், சிமிழி, புதுக்குடி கிராம மக்களின் சிறுதெய்வ வழிபாட்டில் மக்கட்பேறு சடங்குப் பின்புலம்
க.கார்த்திகா

அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி

# அகத்தினுள்


பாம்பாட்டிச் சித்தர் பாடல்களில் சமுதாயச் சிந்தனைகள்
முனைவர். க.விமலா

திருக்குர்ஆன் கூறும் மாந்தர் ஒழுக்கங்கள்
அ.ஷமீலா பேகம்

ஜோ டி குரூஸின் யாத்திரை புதினத்தில் சிறுவனின் தேடல்கள்: கத்தோலிக்கம் மற்றும் பூர்வீக நம்பிக்கைகளின் புரிதல்கள்
முனைவர் தா. இரா.ஹெப்சிபா பியூலா சுகந்தி

கூகை புதினத்தில் கையாளப்பட்டுள்ள உத்தி முறைகள்
இரா.ராஜேஷ் குமார்

எஸ்.இராமகிருஷ்ணனின் மூன்று அற்புதங்கள் சிறுகதையில் தெக்கனின் பாத்திரப்படைப்பு
ஜெ.சர்மிளா

தோட்டியின் மகன் நாவலில் மக்களின் உணர்வுகளும் போராட்டங்களும் முனைவர் வ.மீனாட்சி

கூளமாதாரி புதினத்தில் தலித்தியம்
வீ. சவிதா

வௌவால் தேசத்தில் இயற்கை சூழல்
மு.ஹரிதேவி

சோ. தர்மனின் சூல் நாவலில் பழமொழிகள்
மு.கோமதி

சோ. தர்மனின் 'சூல்' நாவலில் உவமைகள்
இ.ராபர்ட் கென்னடி

மலையகத்தமிழரும் அகதி வாழ்வும்
வேளாங்கன்னி.ஏ

அண்மைய நாவல்களில் மீனவர்களின் பண்பாட்டியல்
முனைவர் ந. இரத்தினக்குமார்

கே.பி கறுப்பனின் பெண்ணியச் சிந்தைனகள்
தனிஜா த. பெ



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்

**பொதிகைமலையின் ஆயண்டிரன்**
**முனைவர் த. முத்துலட்சுமி**

**பாண்டிய நாட்டுத் துறைமுகங்கள்**
**கி.தமிழரசி**

**பழந்தமிழர்களின் வாழ்வியலில் மலர்ப் பயன்பாடு ஒரு பார்வை**
**முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன்**

**வாய்மொழிப் பாடல்களில் பஞ்சகாலக் குறிப்புகள்**
**ம.கலைச்செல்வன்**

**இலக்கியங்களும் பசிப்பிணியும்**
**முனைவர் ப. மணிகண்டன்**

**அறிவியல் நுட்பங்களும் இலக்கிய செழுமையும்**
**முனைவர் அ.புஷ்பா**

**கணினித்தமிழ் வளர்ச்சியில் இணைய நூலகங்கள்**
**கு.நிவேதா**

**மொழி வளர்ச்சியில் ஊடகத்தின் பங்கு**
**முனைவர் ஈ இசக்கியம்மாள்**

*1.The Predicament of Women in Patriarchal Society in Anita Nair's The Better Man*
**K. Nesapriya**

**திரைப்படக் கதைசொல்லலும் சமூகத் தாக்கமும்: அசுரன் திரைப்படம்.**
**(திரைப்படக் கோட்பாடுகள், தொழில்நுட்ப அழகியல் மற்றும் பார்வையாளர் வரவேற்பு)**
**திரு. விசுமாப்போடி சசிகரன்**

**பாலக்காடு மாவட்டத்தில் சுமை தாங்கி**
**முனைவர் வே.இரவி**

**கீழடி அகழாய்வு - தமிழரின் தொன்மையான வரலாற்று பின்புலம்**
**முனைவர் அ. மதலேன்**

**சம்புவராயர் கல்வெட்டுகளில் அறியலாகும் நாடும் ஊரும்**
**முனைவர்அ. அமுல்ராஜ்**

**பரதநாட்டியத்தில் நால்வகை விருத்தியின் வகிபங்கு**
**கலாநிதி தாக்ஷாயினி பரமதேவன்**

**அட்டைப்படம் உதவி**
**இணையம்**

**நன்றி**

# தமிழ்

# PURANANURRIL UYIRIYAL SEITHEIGAL

***MR.V. MGRAMACHANDIRAN** (Reg.No :204PHD23F268TAM ) Ph.D. Research Scholar **(Full Time)**,PG & Research Department Of Tamil,Kalaignar Karunanidhi Government Arts College,Tiruvannamalai - 606 603.(Affiliated To Thiruvalluvar University) Serkkadu, Vellore — 632115.*

***Dr. S.VAITHEESWARAN**,Research Guide & Supervisor,Associate Professor,PG & Research Department Of Tamil,Kalaignar Karunanidhi Government Arts College, Tiruvannamalai - 606 603.*

***Abstract;***

*Sangam literature helps us understand the life history of ancient Tamils. It is divided into eight volumes and ten poems. Among the eight volumes, Puranauru is the one that contains the most external information. It not only mentions the bravery, education, and gifts of the kings, but also mentions information about various living beings that lived during their time. This article is designed to study the activities of living beings, comparisons between living beings, etc.*

***Keywords**: puranananooru, animals, plants, birds,nature*

## புறநானூற்றில் உயிரியல் செய்திகள்

**எம்ஜிராமச்சந்திரன். வெ,** முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, கலைஞர் கருணாநிதி அரசு கலைக்கல்லூரி, திருவண்ணாமலை. (திருவள்ளுவர் பல்கலைக்கழக இணைவு பெற்றது.)

நெறியாளர்:**முனைவர் ச. வைத்தீஸ்வரன்,** இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, கலைஞர் கருணாநிதி அரசு கலைக்கல்லூரி, திருவண்ணாமலை-606603.

**ஆய்வுச் சுருக்கம்**

பண்டைய தமிழர்களுடைய வாழ்க்கை வரலாற்றை அறிந்து கொள்ள உதவுவது சங்க இலக்கியங்கள். இதனை எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என பாகுபடுத்துவர். குறிப்பாக எட்டுத்தொகை நூல்களில் புறம் சார்ந்த செய்திகளை மிகுதியாக சொல்லக் கூடியது புறநானூறு. அரசருடைய வீரம், கல்வி, கொடை சார்ந்த செய்திகளை மட்டுமல்லாது அவர்களுடைய காலகட்டத்தில் வாழ்ந்த பல்வேறு உயிரினங்கள் பற்றிய செய்திகளையும் குறிப்பிடுகின்றது.

உயிரினங்களின் செயல்பாடு, உயிரினங்களுக்கு இடையேயான ஒப்பீடு போன்றவற்றைப் பற்றி ஆயராய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

**திறவுச் சொற்கள்:** புறநானூறு -விலங்குகள்- தாவரங்கள் -பறவைகள்- இயற்கை

**முன்னுரை**

உலகம் என்பது மனிதன் வாழ்வதற்காக மட்டும் உருவாக்கப்பட்டது அல்ல. பல்வேறு உயிரினங்களும் வாழ்வதற்காக உருவாக்கப்பட்டது.உலகில் உள்ள உயிரினங்கள் தன்னை மட்டுமின்றி பிற உயிரினங்களையும் சார்ந்து வாழக்கூடிய காரணிகளைக் கொண்டுள்ளது.உணவு, உடை, இருப்பிடம் போன்ற அடிப்படைத் தேவைகளுக்குக் கூட பிற உயிரினங்களையும், உயிரற்ற பொருட்களையும் சார்ந்து வாழ வேண்டியுள்ளது. உயிரினங்கள் மற்றும் இயற்கைப் பொருட்களின் அவசியத்தினை மக்களுக்கு உணர்த்துவது அவசியமாகிறது. திருவள்ளுவர் உயிரினங்களின் முக்கியத்துவத்தை,

**"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்**

**தொகுத்தவற்றுள் எல்லாந் தலை" (குறள். 322)**

எனும் குறட்பாவின் மூலம் தன்னிடம் இருக்கக்கூடிய பொருட்களைத் தான் மட்டும் பயன்படுத்தாது, பிற உயிரினங்களுக்கும் கொடுத்து உதவ வேண்டுமென்று உயிர்கள் மீதான அருள் உணர்வை வெளிப்படுத்துகிறார். இதுவே அக்கால அறச் செயலாக விளங்கியது.

**புறம்**

புறம் என்று சொன்னவுடன் நம்முடைய நினைவுக்கு வருவது புறநானூறு. புறம் சார்ந்த கருத்துக்களைத் தன்னகத்தே கொண்டிருக்கக்கூடிய நூல். சங்ககால மக்களுடைய செயல்பாடுகளை வெளிப்படையாக சொல்லக் கூடியது புறம். அதை அகத்தே வைத்திருக்கக் கூடியது அகம் என்பர். புறத்தை புறப்பாட்டு என்றும் கூறுவர்.

புறநானூற்றில் பெரும்பாலும் அரசருடைய கல்வி,வீரம்,ஒழுக்கம், போர்த்திறன், கொடைத்திறன், மக்களை காக்கும் பண்பு, அறங்கள், நாட்டு எல்லைகள் பற்றி கூறப்பட்டுள்ளது. அது மட்டுமின்றி அக்காலத்தில் வாழ்ந்த பல்வேறு உயிரினங்கள் பற்றிய குறிப்புகளும் மிகுதியாகக் காணக் கிடைக்கின்றன.இயற்கைச் சூழலில் வாழ்ந்த பல்வேறு உயிரினங்களைப் பற்றி அறிந்து கொள்வதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

**விலங்குகள்**

மனிதனை உயர்திணையாகவும், பிறவற்றை அஃறிணையாகவும் தொல்காப்பியம் பாகுபடுத்துகிறது.

**"உயர்திணை என்மனார் மக்கள் சுட்டே**

**அஃறிணை என்மனார் அவரல பிறவே**

**ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே".(தொல்.சொல்.484)**

தொல்காப்பியர் கிளவியாக்கத்தில் மக்கள் உயர்திணை என்றும். பிற உயிருள்ள மற்றும் உயிரற்றவற்றை அஃறிணை என்றும் கூறுகிறார். மனிதனைத் தவிர்த்த பிற உயிரினங்கள் பற்றிய செய்திகளைக் காண்போம். மனிதனோடு பல விலங்குகள் நெருங்கியும், விலகியும் வாழ்ந்தன. குறிப்பாக மனிதனுடைய உணவுத் தேவைக்காக உழவுப் பணியில் மாடுகளைப் பயன்படுத்தினான்.புறநானூற்றில் சிவபெருமான் காளைகளை வாகனமாகவும் கொடியாகவும் பயன்படுத்திய செய்தி கூறப்பட்டுள்ளது.

**"ஊர்தி வால்வெள் ஏறே சிறந்த**

**சீர்கெழு கொடியும் அவ்ஏறு என்ப"**

அறுவகை சமயத்தில் முதன்மைக் கடவுளாகப் போற்றப்படக்கூடியவன் சிவபெருமான். சிவபெருமானின் வாகனமாகவும், கொடியாகவும் காளை விளங்கியதை அறிய முடிகிறது. உழவுத் தொழிலின் முக்கியத்துவத்தை வள்ளுவர்,

**"சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம் அதனால்**

**உழந்தும் உழவே தலை"(குறள். 1031)**

எனும் குறட்பாவில் உலகில் உள்ள தொழில்களில் முக்கியமானது உழவுத் தொழில் என்பதை உணர்த்துகிறது. மனிதனுடைய தேவைகளில் உணவு மிக முக்கியமானது. உணவைப் பெறுவதற்கு உழவுத் தொழில் முக்கிய பங்கு வகிக்கிறது. உழவுத் தொழில் மேற்கொள்வதற்கு மாடுகள் பயன்பட்டன. உழவுக்கு மாடுகளை பயன்படுத்துவது வழக்கம், மாறாக கழுதைகளைப் பயன்படுத்தியுள்ளனர். என்பதை புறநானூற்றின் மூலமாக அறிய முடிகிறது.

தன்னை எதிர்த்து போரிடக் கூடிய பகை மன்னர்களின் நிலங்களை கைப்பற்றி அவர்களை இழிவு படுத்துவதற்காக மாடுகளுக்கு மாற்றாக கழுதைகளைப் பூட்டி உழவுப் பணியினை செய்துள்ளனர்.இதனை

**“கடுந்தேர் குழித்த ஞெள்ளல் ஆங்கண்**

**வெள்வாய்க் கழுதைப் புல்லினம் பூட்டிப்**

**பாழ்செய் தனைஅவர் நனந்தலை நல்எயில்”(புறம். 15.1-3)**

எனும் புறநானூற்றுப் பாடல் வரிகள் குறிப்பிடுகிறது.

சங்ககாலத்தில் நான்கு வகையான படைகள் போரில் ஈடுபட்டன. அவற்றுள் யானைப் படையும் ஒன்றாகும்.யானைகளைப் போருக்கு மட்டுமின்றி பரிசாகவும் தந்துள்ளனர்.

**“ஆஅய் அண்டிரன் அடுபோர் அண்ணல்**

**இரவலர்க்கு ஈத்த யானையில் கரவின்று” (புறம் 129)**

ஆய்அண்டிரன் எனும் அரசன் தன்னைத் தேடி வரக்கூடிய பரிசிலர்களுக்கு வானத்தில் உள்ள விண்மீன்கள் அளவிற்கு யானைகளைப் பரிசாகத் தந்தான் என்பதை வெளிப்படுத்துகிறது. சங்ககாலத்தில் பல்லாயிரக்கணக்கான யானைகள் வாழ்ந்ததற்கு சான்று பகர்கிறது. போர்க்களத்தில் யானை பயன்பட்டதை வள்ளுவர்

**“கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்**

**மெய்வேல் பரியா நகும்”. (குறள்.774)**

போர்க்களத்தில் தன் கையில் இருக்கக்கூடிய வேலினை யானையின் மீது வீசுகிறான். வீசியதால் தன்னுடைய கையில் வேலில்லை. எனவே பகைவர்களைத் தாக்க முடியவில்லை என்று வேலினைத் தேடுகிறான். அப்பொழுது தன்னுடைய மார்பில் பாய்ந்திருக்கக்கூடிய வேலினைக் கண்டு மகிழ்ந்து அதனை பறித்து எதிரியை எதிர்த்துப் போரிடுகிறான். வீரனின் பெருமை,யானையை எதிர்த்துப் போரிடுதல் பற்றிஅறியமுடிகிறது. மனிதனின் வாழ்க்கையிலும், இயற்கைச் சூழலிலும் விலங்குகள் பல்வேறு செயல்பாடுகளுக்கு பயன்பட்டுள்ளன என்பதை அறிய முடிகிறது. இவை மட்டுமின்றி ஆடு, கோழி, குரங்கு, புலி, எலி ,முயல், முதலை, அணில் ஆந்தை ,பாம்பு ,நீர்நாய் பன்றி, உடும்பு போன்ற விலங்குகள் பற்றிய செய்திகளும் புறநானூற்றில் கூறப்பட்டுள்ளது.

**தாவரங்கள்**

உலக உயிரினங்களில் தான்மட்டுமே உயர்ந்த உயிரினம் என்ற நிலைப்பாட்டை மனித இனம் கொண்டுள்ளது. அதனால் தன்னோடு இருக்கக்கூடிய உயிரினங்கள் மீது

ஆதிக்கத்தை செலுத்துகிறது. மனித வாழ்க்கையில் பல்வேறு தாவரங்கள் மருந்திற்காக பயன்பட்டன. நற்றிணை

**"மரஞ்சா மருந்துங் கொள்ளார் மாந்தர்" (நற்றி.226)**

மருந்தாக கொள்வதாக இருப்பினும் மரத்தை அப்படியே அழித்து விடுவது வழக்கமில்லை. தேவைக்கேற்ப பயன்படுத்துவர் என்ற செய்தியை கூறுகிறது. திருவள்ளுவர் தாவரங்களின் உருவ அமைப்பை 104 ஆவது குறட்பாவில்

**"தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்**

**கொள்வர் பயன்தெரி வார்" (குறள்.104)**

ஒருவன் தினை அளவு செய்யக்கூடிய உதவியானது மற்றொருவனுக்கு பனையளவாகத் தோன்றுகிறது என்கிறார். தினை என்பது அளவில் சிறியது. பனை அளவில் பெரியது என்ற செய்தியை அறிவதோடு, தினையின் உருவ அமைப்பும், பனையின் உருவமைப்பும் ஒப்பு நோக்கப்படுகிறது இதில் தினையைக் காட்டிலும் பனை பன்மடங்கு உயர்ந்தது என்பது வெளிப்படுகிறது.

தமிழகத்தை ஆட்சி செய்த அரசர்களுள், தலைசிறந்த அரசர்கள் மூவேந்தர்கள். மூவேந்தர்கள் என்று சொன்னவுடன் நம்முடைய நினைவுக்கு வருபவர்கள் சேர,சோழ,பாண்டியர்கள். இவர்கள் தங்களுடைய அடையாளமாக பனை, ஆத்தி,வேம்பு மாலைகளை அணிந்திருந்தனர். இந்நிகழ்வு தாவரங்கள் மீதான ஈடுபாட்டினை வெளிப்படுத்துகிறது.

**"இரும்பனை வெண்தோடு மலைந்தோன் அல்லன்**

**கருஞ்சினை வேம்பின் தெரியலோன் அல்லன்**

**நின்ன கண்ணியும் ஆர்மிடைந் தன்றே நின்னொடு**

**பொருவோன் கண்ணியும் ஆர்மிடைந் தன்றே" ( புறம்.45)**

எனும் புறநானூற்றுப் பாடல் வரிகள் சேர மன்னன் கரிய பனையின் வெண்ணிறப் பூமாலையைச் சூடுவார் என்ற செய்தியை கூறுகிறது . பனையின் கரிய நிறமும் அதில் தோன்றும் வெண்ணிறப் பூ என வண்ணங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. வலிமையான கிளைகளை உடைய வேம்பு மாலையை அணிந்தவன் பாண்டியன். சோழர் குடிக்குரியதாக ஆத்திப்பூ கூறப்படுகிறது. அரசர்களுடைய வாழ்க்கையில் பூக்கள் மாலைகளாகப் பயன்படுத்தப் பட்டுள்ளன.

மன்னர்களின் வாழ்வில் தாவரங்கள் முக்கிய பங்காற்றியதை இதன்மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

**பறவைகள்**

பறவைகள் உணவுத் தேவைக்காகவும், சூழலியல் மாற்றத்திற்காகவும் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு வலசை போகக்கூடிய வழக்கம் பல நூற்றாண்டுகளாக நிலவிக் கொண்டிருக்கின்றது. வேடந்தாங்கல் சரணாலயங்களைப் பற்றி அறிந்திருக்கின்றோம். பறவையினங்கள் ஓரிடத்திலிருந்து வேறு இடத்திற்கு வலசை போகின்றன. உணவுத் தேவையாலும்,காலநிலை மாற்றத்தாலும் பறவைகள் ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு செல்லக்கூடிய வழக்கம் நெடுங்காலமாக வழக்கத்தில் இருந்திருக்கின்றது.

**"பழுமரம் உள்ளிய பறவை போல" (புறம்.370)**

புறநானூறு வரிகள் மனிதர்களுடைய வாழ்க்கைக்கு பறவையின் வாழ்க்கை எடுத்துக்காட்டாக சொல்லப்பட்டுள்ளது. பறவைகள் தன்னுடைய உணவுத் தேவையை நிறைவேற்றிக் கொள்வதற்காக பழுத்த மரங்களைத் தேடிச் சென்று உணவுத் தேவையை நிறைவேற்றிக் கொள்கிறது. அதுபோல மனிதர்களும் தன்னுடைய வறிய நிலையை போக்கிக் கொள்ள வளமையுள்ள புரவலர்கள் மற்றும் அரசர்களை நாடி உணவுத் தேவையை நிறைவேற்றிக் கொள்கின்றனர்.

**"மீன் உண் கொக்கின் தூவி அன்ன" (புறம்.277)**

மீனை உணவாக உட்கொள்ளும் நாரையின் வாழ்க்கை பற்றி பேசப்பட்டுள்ளது. கொக்கானது தன்னுடைய வேட்டைக்காக நீண்ட நேரம் காத்திருக்கும் என்ற செய்தியை ஔவையாரின் மூதுரை பாடலிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**"ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்**

**வாடி இருக்குமாம் கொக்கு"**

சிங்கம், புலி போன்ற விலங்குகள் தன்னுடைய இறைக்காகக் காத்திருந்து வேட்டையாடுவதைப் போல பறவைகளும், குறிப்பாக கொக்கு தன்னுடைய உணவுக்காகக் காத்திருந்து அதனைப் பிடித்து உட்கொள்கிறது என்ற செய்தி கூறப்பட்டுள்ளது.

**"படலை முன்றில் சிறிதினை உணங்கல்**

**புறவும் இதலும் அறவும் உண்கெனப்**

**பெய்தற்கு எல்லின்று பொழுதே. (புறம்.319)**

புறாக்கள் மற்றும் இதல் பறவைகளைப் பிடிப்பதற்காக படல்கட்டிய முற்றத்தில் சிறிய தினைகளை புறாக்களும், பறவைகளும் தின்பதற்காகத் தெளித்து அவற்றை பிடித்து சமைப்பதற்காக காத்திருப்பர். என்ற செய்தி பறவைகளை மனிதர்கள் உணவுக்காக வேட்டையாடினர் என்பதை உணர்த்துகிறது.

வான்வழியே பறந்து செல்லும் அன்னத்தைத் தூதாக பிசிராந்தையார் அனுப்புகிறார். கோப்பெருஞ்சோழனை சென்று சந்தித்தால் உன்னுடைய பெடைக்கு தேவையானவற்றை அவரே தந்துருளுவார் என்று அன்னச்சேவலிடம் சொல்லியதாகப் புறநானூற்றுப் பாடல் உள்ளது.

**"அன்னச் சேவல் அன்னச் சேவல்**

**ஆடுகொள் வென்றிஅடுபோர் அண்ணல்" (புறம்.66)**

அன்னம் பாலில் உள்ள நீரைத் தவிர்த்து பாலை மட்டும் பருகக் கூடியது. இங்கு பிசிராந்தையார், கோப்பெருஞ் சோழனுடைய நட்பு பேசப்பட்டுள்ளது.

**"கூர்உகிர்ப் பருந்தின் ஏறுகுறித்து ஒரீஇத்**

**தன்அகம் புக்க குறுநடைப் புறவின்**

**தபுதி அஞ்சிச் சீரை புக்க**

**வரையா ஈகை உரவோன் மருக" (புறம்.43)**

பருந்திற்கு அஞ்சி தப்பியோடிய புறா சிபி என்ற மன்னனை சேர்கிறது.அந்த புறாவின் மீது இரக்கப்பட்ட மன்னன் புறாவிற்காக தன்னுடைய தசையினை அறுத்துத் தருவதாகக் கூறி, புறாவைக் காப்பாற்றுகிறார். பறவைகள் மீதும் இரக்கத்தோடு வாழ்ந்த சோழர்கள் பற்றி பேசப்பட்டுள்ளது.

**"கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்**

**குத்தொக்க சீர்த்த இடத்து" (குறள்.490)**

திருக்குறளிலும் கொக்கு பற்றிய செய்தி கூறப்பட்டுள்ளது. கொக்கு தன்னுடைய உணவு வரும் வரை காத்திருந்து கொத்தித் தின்னும். அதுபோல மனிதர்கள் தனக்குரிய காலம் வரும் வரை

காத்திருந்து உரிய நேரத்தில் தன்னுடைய செயலை செய்தால் வெற்றி நிச்சயம். என்ற செய்தி பறவையின் மூலமாக மனிதர்களுக்கு உணர்த்தப்படுகிறது.

**தொகுப்புரை**

சங்க இலக்கியம் மனிதர்களுடைய வாழ்க்கையை அறிந்து கொள்ளக்கூடிய கருவூலம் மட்டுமன்று. மனிதனோடு தொடர்புடைய, இயற்கைச் சூழலில் வாழக்கூடிய உயிரினங்கள், இயற்கை பற்றிய குறிப்புகளும் மிகுதியாக காணக் கிடைக்கின்றன. சங்ககாலத்தில் வாழ்ந்த விலங்குகளைப் பற்றிய செய்திகள் குறிப்பிடப்பட்டுள்ளது. பண்டைய காலத்தில் மக்கள் தங்களுடைய வீடுகளில் ஆடு மாடுகளை வளர்த்திருக்கின்றனர் என்ற செய்தியும் அறிய முடிகிறது.

மனிதர்கள் தங்களுடைய உணவுத் தேவைக்காகவும், இருப்பிடத் தேவைக்காகவும் பல்வேறு தாவரங்களை வளர்த்துள்ளனர் குறிப்பாக வீட்டின் கூரைகளை அமைக்கவும் உணவுப் பொருட்களை உற்பத்தி செய்யவும் தாவரங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.பறவைகளின் வாழ்க்கை மனித வாழ்வியலோடு ஒப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது பறவைகளை உதாரணமாகக் கொண்டு மனிதர்கள் வாழ வேண்டுமென்ற அடிப்படையிலும் பல்வேறு செய்திகள் கூறப்பட்டுள்ளது.தற்காலத்தில் உயிரினங்கள் மீதான இரக்க உணர்வு குறைந்துக் கொண்டே செல்கிறது. பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் பண்பு மேலோங்க வேண்டும்.

**துணை நூற் பட்டியல்**


1. சங்க இலக்கியம்-மூலமும் உரையும் கோவிலூர் மடாலயப் பதிப்பு

2. சங்க இலக்கிய உரை வேறுபாட்டு களஞ்சியம். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

3. தொல்காப்பியம் -புலியூர்க் கேசிகன் உரை

4. திருக்குறள் -புலியூர்க் கேசிகன் உரை, பூம்புகார் பதிப்பகம்.

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்


## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2026, ஜனவரி மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - ஜனவரி 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com